## பரலோகத்தில் எப்படிப்பட்ட ஜனங்களோடு நிற்போம்?




நம்மை ஆறுதல்படுத்த, ஊக்குவிக்க இங்கு ஒரு காரியம் பாருங்கள். தம்முடைய ராஜ்ஜியத்தைக் கட்ட தேவன் பலவீனத்தினின்றும் தாழ்மையினின்றும் ஜனங்களை தெரிந்துக் கொண்டார். நாம் எப்பொழுதாவது அவருடைய சபையோடு பரலோகம் சென்று அவருடைய பிரசன்னத்தில் நிற்போமென்றால் அங்கு, உலகத்தால் புறம்பே தள்ளப்பட்ட ஒன்றுமில்லாத பலவீன மான ஒரு கூட்ட ஜனங்களோடு தான் நாம் நிற்போம்

செய்தி: பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம்

# தேவன் யாரை உபயோகிப்பார்?

தாங்கள் ஒன்றுமில்லையென்று ஒப்புக் கொடுக்கின்ற ஜனங்களை தேவன் உபயோகிக்கின்றார்.



டி. எல். மூடி

சிக்காகோவிலுள்ள பாஸ்டனை சேர்ந்த டி.எல்.மூடி செருப்புகளைத் தைக்கிற, சாதுரியமில்லாத தன் சுயத்தின் மேல் சாராத ஓர் சிறிய மனிதனாயிருந்தான். இன்று மூடியின் பேரில் இவர்கள் அமைத்திருக்கிற இந்த பள்ளிக் கூடங்களைப் பாருங்கள், டுவைட் மூடி இன்று உயிர்த்தெழுந்து வந்து இந்த பள்ளிகளைப் பார்ப்பானென்றால், அவன் செய்யும் முதல் காரியம் என்ன தெரியுமா, அவைகளை ஒழித்து விடுவான்.



மார்ட்டின் லூத்தர்




ஜான் வெஸ்லி

மார்டீன் லூத்தர் உயித்தெழுந்து வந்தால் அவன் செய்யும் முதல் காரியம், லூத்தரன் ஸ்தாபனத்தை ஒழிப்பதுதான். ஜான் வெஸ்லியும் அவ்விதமே செய்வான். அம் மனிதர்கள் ஒரு போதும் அந்த ஸ்தாபனங்களை கண்டு பிடிக்கவில்லை, ஆனால் அவர்களை பின் சென்ற மனிதர்கள் தாம் அவ்விதம் செய்து விட்டார்கள்.

செய்தி: பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம்

# எனக்குள்ள ஓர் மகத்தான எதிரி



"எனக்குள்ள ஓர் மகத்தான எதிரி வில்லியம் பிரன்ஹாம்தான்" என்று நான் அடிக்கடி கூறுவதுண்டு. அந்த நான்தான் தேவனுடைய வழிகளுக்கு குறுக்காக நிற்பது; அந்த நான்தான் சோம்பேறியாயிருப்பது, அந்த நான்தான் தான் ஏதாகிலும் செய்ய முடியும் என்ற நிலைக்கு வந்து அவ்விதம் செய்யும் போது தேவனை காட்சியிலிருந்து அகற்றிவிடுகிறதாயிருக்கிறது. ஆனால் அந்த மனிதனை நான் களைந்து விடக் கூடுமானால் அம் மனிதன் என்னை விட்டு கடந்து விட்ட நிலைக்கு நான் வரக் கூடுமானால், அப்பொழுது தேவன் அங்கு வந்து வில்லியம் பிரன்ஹாமிற்கு தெரியாத காரியங்களைச் செய்யக் கூடும்.

அப்பொழுது தான் தேவன் உங்களில் எவரையானாலும் உபயோகிக்க முடியும். வழியின் குறுக்கேயிருந்து நாம் விலகுவோமென்றால் அவரால் எந்த மனிதனையும் உபயோகிக்க முடியும். ஆனால், வழியில் நாம் காணப்படும் வரை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

செய்தி: பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம்

## நீங்கள் வேத பள்ளிக்கு செல்ல அவசியமில்லை




நீங்கள் வேத பள்ளிக்கு செல்ல அவசியமில்லை. நீங்கள் சாதுரியவான்களாக இருக்க அவசியமில்லை. நீங்கள் ஒன்றுமில்லை என்ற காரியத்தை உணர்ந்து கொள்வதே காரியமாகும். தேவன் உங்களை சிறைபிடிக்க விடுங்கள். மற்றவைகளையெல்லாம் அவர் பார்த்துக் கொள்வார்.

தேவன் எப்பொழுதும் ஒன்றுமில்லாதவர்களை தெரிந்து கொண்டு அவர்களை விசேஷமானவர்களாக மாற்றுகிறார் என்பதை சரித்திரமானது அன்றும் இன்றும் நிரூபிக்கிறதாயிருக்கின்றது. ஒன்றுமற்ற நபரையே தேவன் தம் கரத்தில் எடுக்கிறவரா யிருக்கிறார்.

தேவன் மகத்தான, பலமுள்ள புத்திசாலிகளான பிரசங்கிமார்களையெல்லாம் புறக்கணித்து விட்டு தான் ஒன்றுமில்லா தவன் என்று உரிமை கொண்டாடும் ஓர் சிறிய மனிதனுக்குள் தம்முடைய செய்தியை வைத்தார்.

செய்தி: பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம்

# குப்பையான நம்முடைய திறமைகள்



சில ஜனங்கள், கிறிஸ்தவர்களாக மாறினவுடன் அகந்தையுள்ளவர்களாகவும், வித்தியாசமானவர்களாகவும் மாறி விடுகின்றனர். நம்மில் அநேகர் நம்முடைய ஜீவியங்களில் அவ்விதமாக செய்கிறோம். அது உண்மை. அவர்கள் மாறான பாதையை எடுத்துக் கொள்ளும் போது, முன் நோக்கிச் செல்வதற்கு பதிலாக பின் நோக்கிச் செல்லுகிறவர்களாயிருக்கிறார்கள். நீங்கள் அதிகமாக உங்களை துறக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் உள்ளே வருவதற்கு அங்கே அதிக இடமுண்டாயிருக்கும்.

எலிசா யோசபாத்தையும் அவனை சேர்ந்தவர்களையும் பார்த்து, “இந்த பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள் (II இரா.3:16). ஆழமாக தோண்டும் போது தண்ணீர் நிரப்புவதற்கு அதிக இடமுண்டாயிருக்கும்" என்று கூறினது போல நம்முடைய “நாம்" என்ற காரியத்தையும், குப்பையான நம்முடைய திறமைகளையும் அதிகமாக நம்மைவிட்டு வெளியே தள்ளும்போது, தேவனுடைய ஆவியானவர் நிரம்புவதற்கு அதிக இடமங்கேயுண்டாயிருக்கும்.

செய்தி: பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம்